பாலுற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத்துறை ஆணையர் அலுவலகம், சென்னை–51

கூடுதல் பால் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை

முன்னிலை:– திரு.ஜி.கிறிஸ்துதாஸ், M.A., H.D.C.,
கூடுதல் பால் ஆணையர்

ந.க.எண். 3531 / ஆ3 / 2020 நாள்:17.03.2020

| | |
|---|---|
| பொருள் :– | பணியமைப்பு – பால்வளத்துறை – பணிவரன்முறை – நேரடி நியமனம் – தமிழ்நாடு அமைச்சுப் பணியில் நியமனம் செய்யப்பட்ட இளநிலை உதவியாளர்களை பணி வரன்முறைபடுத்தி ஆணை பிறப்பித்தல் – தொடர்பாக. |
| பார்வை: | 1) தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய கடிதம் எண்.1358/PSD-G1 / 2019 நாள்:18.02.2019<br>2) துணைப்பால் ஆணையர் (கூட்டுறவு) அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.24253 / ஆ3 / 2018, நாள்.22.02.2019 |
| படிக்க:– | 1. அரசாணை எண் 191. பொதுத்துறை நாள் : 1.02.62<br>2. அரசாணை எண் 130, பணியாளர் (ம) நிர்வாக சீர்திருத்த துறை, நாள் : 22.07.2008 |

------------

ஆணை–

பார்வை (1)ல் காணும் கடிதத்தின்படி, இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 12 இளநிலை உதவியாளர்களுக்கு, பார்வை(2)ல் காணும் துணைப்பால் ஆணையர் (கூட்டுறவு) அவர்களின் செயல்முறை ஆணையின்படி, இத்துறையின் தலைமையிடம் மற்றும் சார்நிலை அலுவலகங்களில் பணியாற்றிட தற்காலிகமாக நியமனம் செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டது.

படிக்க 1ல் காணும் அரசாணையின்படி, இப்பணியாளர்கள், அவர்கள் பணியில் சேர்ந்த நாளான கீழ்காணும் பட்டியலில் கலம் 3–ல் குறிப்பிட்ட நாள்முதல் பணிவரன்முறை செய்து இதன்வாயிலாக ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | பணியாளர்கள் பெயர் / பதவி திருவாளர்கள் | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் | பணிபுரியும் அலுவலகம் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | P.பிரசன்யா,<br>இளநிலை உதவியாளர் | 04.03.2019 மு.ப. | 04.03.2019 மு.ப. | துணைப்பதிவாளர் (பால்வளம்), ஈரோடு |

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| 2 | S.ராஜேஷ்,<br>இளநிலை உதவியாளர் | 04.03.2019 மு.ப. | 04.03.2019 மு.ப. | ஆணையர் அலுவலகம்<br>சென்னை.51 |
| 3 | B.பாலகுமார்<br>இளநிலை உதவியாளர் | 11.03.2019 மு.ப. | 11.03.2019 மு.ப. | துணைப்பதிவாளர்<br>(பால்வளம்), தேனி |
| 4 | C.ரமேஷ்<br>இளநிலை உதவியாளர் | 04.03.2019 மு.ப | 04.03.2019 மு.ப | துணைப்பதிவாளர்<br>(பால்வளம்),<br>கிருஷ்ணகிரி |
| 5 | D.கௌதம்<br>இளநிலை உதவியாளர் | 01.03.2019 மு.ப | 01.03.2019 மு.ப | துணைப்பதிவாளர்<br>(பால்வளம்), பெரம்பலூர் |
| 6 | R.சூரியா<br>இளநிலை உதவியாளர் | 01.03.2019 மு.ப | 01.03.2019 மு.ப | துணைப்பதிவாளர்<br>(பால்வளம்),<br>திருவள்ளூர் |
| 7 | M.திவ்யபாரதி<br>இளநிலை உதவியாளர் | 04.03.2019 மு.ப | 04.03.2019 மு.ப | ஆணையர் அலுவலகம்<br>சென்னை.51 |
| 8 | M.சிவசக்தி<br>இளநிலை உதவியாளர் | 27.02.2019 மு.ப | 27.02.2019 மு.ப | துணைப்பதிவாளர்<br>(பால்வளம்), தருமபுரி |
| 9 | G.சுபாஷினி<br>இளநிலை உதவியாளர் | 01.03.2019 மு.ப | 01.03.2019 மு.ப | துணைப்பதிவாளர்<br>(பால்வளம்), தூத்துக்குடி |
| 10 | M.நிவேதா<br>இளநிலை உதவியாளர் | 04.03.2019 மு.ப | 04.03.2019 மு.ப | துணைப்பதிவாளர்<br>(பால்வளம்),<br>திருச்சிராப்பள்ளி |

1. இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன் முறைப்படுத்தப்பட்ட பணியாளர்கள், பணிவரன் முறைப்படுத்தப்பட்ட நாள் முதல், தொடர்ந்து வரும் மூன்றாண்டு பணிக்காலத்தில் தங்களது தகுதிகாண் பருவ காலமான இரண்டாண்டுகள் முடித்திடல் வேண்டும்.

2. இளநிலை உதவியாளர்கள், தகுதிகாண் பருவம் முடிக்கும் காலத்தில், தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்வு (Tamilnadu Government Office Manual) மற்றும் பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி மையத்தில் வழங்கப்பெறும், அரசு அலுவலர்களுக்கான

அடிப்படை பயிற்சியில் தேர்ச்சி பெற்று நிறைவு செய்யவேண்டும். அவ்வாறு தேர்ச்சி பெறாவிடில் அவர்களது தகுதிகாண் பருவம் முடிக்கப்படமாட்டாது என தெரிவிக்கப்படுகிறது. மேலும் மேற்கண்ட தேர்வுகள் மற்றும் பயிற்சியில் தேர்ச்சி பெற்ற பின்னரே இவர்களுக்கு இரண்டாம் ஆண்டு ஊதிய உயர்வு உள்ளிட்ட அடுத்த ஊதிய உயர்வுகள் வழங்கப்பெறும் என தெரிவிக்கப்படுகிறது.

3. இந்த பணி வரன்முறை ஆணை, 2015–16, 2016–17 மற்றும் 2017–18ம் ஆண்டிற்கான, தொகுதி–4ன் கீழான பணியிடங்களுக்கான ஆளெடுப்பு தொடர்பாக சென்னை உயர்நீதிமன்ற சென்னை / மதுரை கிளைகளில் தொடரப்பட்டுள்ள வழக்குகளின் தீர்ப்புக்கு உட்பட்டதாகும். (The regularization of the selected candidates is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble Madras / Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to Combined Civil Services Examination – IV for the year 2015-16, 2016-17 and 2017-18 recruitment)

மேற்காணும் நிபந்தனைகளின்படி மேற்படி 10 இளநிலை உதவியாளர்களின் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

(ஒம்)/– ஜி.கிறிஸ்துதாஸ்,
கூடுதல் பால் ஆணையர்

<u>பெறுநர்</u>

1. சம்பந்தப்பட்ட பணியாளர்கள்
   – சம்பந்தப்பட்ட துணைப்பதிவாளர் (பால்வளம்)கள் மூலமாக
2. சம்பந்தப்பட்ட துணைப்பதிவாளர் (பால்வளம்)கள்.
3. பிரிவு எ, தலைமையகம்
4. இருப்புக் கோப்பு
5. பணியாளர்களின் பணிப்பதிவேடு.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

கூட்டுறவு சார்பதிவாளர்